# புராதன இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் சமூகக் குழுக்கள் - புள்ளிவிபரவியல் ஆய்வு

# Social Groups in Ancient Sri Lankan Brahmi Inscriptions - A Statistical Study

Gowry Luxmykanthan,
Senior Lecturer, Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
gowryl@esn.ac.lk


## Abstract

*Inscriptions have been discovered in Sri Lanka since the third century BC. These are the evidences that people of different social levels followed and supported Buddhism in ancient Sri Lanka. It can be known from the epithets appearing with their names that there were many social groups among those who donated to the Buddhist monastery. The objective of this research is to reveal the status of social groups that followed Buddhism in ancient Sri Lankan society by analyzing them statistically. The inscriptions were examined and statistical data were entered into Excel software and converted into graphs. A historiographical approach is used to conclude by comparing historical facts with other evidence. This is a mixed study Qualitative and Quantitative. According to the results of the study, the people of the Bharatava clan called Bharata or Bada have given the most donations. This makes it clear that they are seen as the most important social class in ancient Sri Lanka. The names of Nagas are also discovered, which shows that these original inhabitants of Sri Lanka got rid of their worship and accepted Buddhism over time. The Tamils have lived as an ethnic group or community since the third century BC. Brahmins supported Buddhism along with their Vedic culture. It is noteworthy that North Indian social groups including Kabojars were involved in trade activities and supported Buddhism.*


*Key words: Bharatava, Brahmin, Buddhism, Nagas, Tamils*

## 1. அறிமுகம்

### 1.1. ஆய்வு அறிமுகம்

இலங்கையில் கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் அண்மைக்காலம் வரை காணப்படுகின்றன. இவற்றுள் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை பிராமி எழுத்தில் எழுதப்பட்டமையால் பிராமிக் கல்வெட்டுக்கள் எனவும் குகைத் தளங்களில் எழுதப்பட்டமையால் குகைக் கல்வெட்டுக்கள் எனவும் புராதன கல்வெட்டுக்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. 1500க்கு மேற்பட்ட புராதன கல்வெட்டுக்கள் இலங்கையின் பல பாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை ஓரிரு வரிகளில் பௌத்த குருமாருக்கு, பௌத்த சங்கத்தாருக்கு அக்காலச் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் அளித்த நிலம், குளம், கால்வாய், குகை, கற்படுக்கை, பணம், உணவு போன்ற தானங்கள் பற்றிக் கூறுகின்றன. பொதுவாக இவற்றில் தானமளித்தவர் பெயரோடு அவரது வம்சம், பட்டம்,

பதவி, தொழில், மதம், இனம் போன்ற தரவுகளும், அவர்கள் வாழ்ந்த இடம், ஊர், நாடு போன்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன (IC, 1970, 1983, Karunaratne, 1984).

இலங்கையில் அண்மைக் காலங்களில் கிடைக்கின்ற தொல்லியற் சின்னங்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது ஏறத்தாழ கி. மு. 1000ஆம் ஆண்டுகளில் பரவிக் கொண்ட பெருங்கற்பண்பாட்டுடன் புராதன சமூக உருவாக்கம், பல்வேறு தொழில் சார்ந்த பிரிவினை என்பன தோன்றின. இதற்கு அக்காலத்திற்குரிய ஈமச்சின்னங்களை அமைப்பதில் பின்பற்றப்பட்ட தொழிநுட்பம், வடிவமைப்பு, அவற்றில் இடப்பட்ட நிவேதனப் பொருட்கள், மட்பாண்டங்கள், கல்மணிகள், கலைப்பொருட்கள், குறியீடுகள் என்பவற்றை சான்றாகக் கூறலாம். இலங்கையின் வரலாற்றுக் காலத்தில் பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்படும் சமூகப் பிரிவுகளும், தொழிற்பிரிவுகளும் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சியாகும்.

பிராமிக் கல்வெட்டுக்களில் சமூகப் பிரிவுகள், தொழிற் பிரிவுகள் பற்றிய விரிவான தகவல்களைப் பெறமுடியாது. தானத்தைப் பற்றிய செய்திகளை குறிப்பிடுகின்றவிடத்து தானகாரருடைய பெயரின் முன்னொட்டாக அவரது சமூகப் பெயர்கள் அடைமொழிகளாக இடம்பெறுகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு பாளி, பழந்தமிழ் இலக்கியங்களின் உதவியோடு அவர்கள் பற்றியும், அவர்களது தொழில் பற்றியும் அறிய முடிகின்றது. அவற்றை புள்ளிவிபரவியல் அடிப்படையில் ஆராய்கின்றவிடத்து கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையான காலத்தில் பௌத்த சமயத்தின் ஆதாரவாளர்களாக இருந்த மக்கள் பற்றியும், யார் அதிகளவு பௌத்தத்தை தழுவியிருந்தனர் எனவும் ஒரு முடிவிற்கு வர முடியும்.

### 1.2. ஆய்வு நோக்கம்

கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் இலங்கையில் பல்வேறு சமூக மட்டத்தவர்களும் பௌத்த நெறியைப் பின்பற்றியும், ஆதரித்தும் உள்ளனர். பௌத்த சங்கத்திற்கு தானம் வழங்கியோரில் பல சமூகப் பிரிவினரும் இருந்துள்ளமைக்கு அவர்களது பெயர்களுடன் இடம்பெறுகின்ற அடைமொழிகள் சான்றாக அமைகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு புள்ளிவிபரவியல் ரீதியாக ஆராய்வதனூடாக புராதன இலங்கைச் சமூகத்தில் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய சமூகப் பிரிவுகளின் நிலையை வெளிப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

### 1.3. ஆய்வு அணுகுமுறை

கல்வெட்டுக்கள் ஆராயப்பட்டு புள்ளிவிபர தரவுகள் Excel மென்பொருளில் உள்ளிடப்பட்டு வரைபுகளாக மாற்றப்பட்டுள்ளன. வரலாற்றம்சங்களை ஏனைய சான்றுகளுடன் ஒப்பிட்டு முடிவுகளை வெளிப்படுத்துவதற்காக வரலாற்று ஆய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகள் புள்ளி விபரவியல் மற்றும் பண்பு ரீதியாக ஆராயப்பட்டுள்ளமையால் இதுவொரு கலப்பு ஆய்வாக அமைகின்றது.

**1.4. ஆய்வு வரையறை**

இலங்கையில் கண்டறியப்பட்ட புராதன கல்வெட்டுக்கள் வெவ்வேறு நூல்களில் வெளியிடப்பட்டபோதிலும் இவற்றில் பெருமளவானவற்றை பேரா. பரணவிதான 1970ஆம் ஆண்டு Inscription of Ceylon – Early Brahmi Inscriptions (Vol-1), 1983ஆம் ஆண்டு அதன் இரண்டாவது அத்தியாயத்தை Inscription of Ceylon – Late Brahmi Inscriptions (Vol-II, Part-I&II (2001)), எனும் இரு பிரிவாக வெளியிட்டார். பிற்காலத்தில் பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதிலும் ஆய்வுச் சுருக்கம் கருதி இந்த மூன்று நூல்களில் இடம்பெறுகின்ற கல்வெட்டுக்கள் மட்டுமே இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் காலம் ஏறத்தாழ கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையானதாகும்.

**2. இலக்கிய மீளாய்வு**

இலங்கைப் புராதன கல்வெட்டுக்கள் தொடர்பான கண்டுபிடிப்புகள் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எ. சி. புறோடி என்பவரால் புத்தளம் தோணிகலவில் ஆரம்பிக்கப்பட்டன (1855). 1882ஆம் ஆண்டு எட்வர்ட் முல்லர் (Edward Muller) 'Ancient Inscriptions in Ceylon' எனும் நூலில் பிராமிக் கல்வெட்டுக்கள் பலவற்றை வெளியிட்டார். 1909 எச். பார்க்கர் தனது Ancient Ceylon எனும் நூலின் பதினோராவது அத்தியாயத்தில் 83 பிராமிக் கல்வெட்டுக்களை வெளியிட்டிருந்தார்.

பரணவிதான 1970ஆம் ஆண்டு Inscription of Ceylon – Early Brahmi Inscriptions (Vol-II) எனும் தொகுப்பை வெளியிட்டார். இதில் நாடளாவிய ரீதியில் கண்டறியப்பட்ட 1281 கல்வெட்டுக்களின் படிகளும், அதன் மொழிபெயர்ப்புக்களும் வெளியிடப்பட்டன. இந்நூலில் தமிழர், காபோஜர், பிராமணர் ஆகிய இனக்குழுக்கள் தொடர்பான விடயங்கள் சுருக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளன. பரணவிதானவால் 1983ஆம் ஆண்டு Inscription of Ceylon – Late Brahmi Inscriptions (Vol-II) எனும் தொகுப்பின் முதற் பகுதி வெளியிடப்பட்டது. இதன் இரண்டாவது பகுதி மாலினி டயஸ் அவர்களால் 2001ஆம் ஆண்டு பதிப்புச் செய்யப்பட்டது.

சிற்றம்பலம் அவர்களின் ஈழத்து இந்து சமய வரலாறு எனும் நூல் புராதன காலம் முதலாக இலங்கையில் இந்து சமயம் நிலைபெற்றிருந்த போக்கினை பல்வேறு கோணங்களிலும் ஆய்வு செய்கின்றதாக அமைகின்றது. இதில் பிராமணர்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது (சிற்றம்பலம், 1996).
லக்ஷ்மன் பெரேரா இலங்கைக் கல்வெட்டுக்களை ஆராய்ந்து அவற்றினூடாக புராதன அரசியல், பொருளாதார, சமூக நிறுவனங்கள் தொடர்பாக தனது ஆய்வு நூலை வெளியிட்டார் (The Institutions of Ceylon From Inscriptions - From 3rd Century B.C to AD 830, Vol-I). இவரது கருத்துக்கள் பெரிதும் பரணவிதானவின் கருத்துக்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை

சுட்டிக்காட்டத்தக்கது. இவரது கருத்துக்கள் பல மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றன (Perera Lakshman, 2001).

புஸ்பரட்ணம் அவர்களின் பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) எனும் ஆய்வு நூலானது இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற ஆட்பெயர், உறவுப் பெயர், இடப்பெயர் என்பவற்றில் தமிழ் மொழிச் செல்வாக்கு காணப்படுகின்றதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்துகின்றதாக அமைந்தது. அவற்றில் நாகர், பரதவர் ஆகிய சமூகக் குழுக்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

பொதுவாக நோக்குகின்றவிடத்து இவ்வாய்வுகள் பெரும்பாலும் ஒரு சில சமூகப் பிரிவினர் பற்றியதாக அமைகின்றன. இவற்றில் எந்தவொரு ஆய்வும் புள்ளிவிபரவியல் அணுகுமுறை கொண்ட ஆய்வாக அமையவில்லை. ஆயினும் இவை ஆய்வினைக் கட்டமைப்பதற்கான வழிகாட்டியாக அமைகின்றன.

## 3. சமூகப் பிரிவுகள்


### 3.1. பரதவ(ர்)

பரதவர் என்போர் தமிழகத்தின் ஐவகை நிலங்களுள் ஒன்றான கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழ்ந்த நெய்தல் நில மக்களாக சங்க காலத்தில் குறிக்கப்படுகின்றனர். ‘பரவர்’ என அழைக்கப்படும் இவர்கள் மீன்பிடித்தல், முத்துக் குளித்தல், வர்த்தகம் முதலான தொழில்களில் ஈடுபட்டமைக்கு இலக்கியத் தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன (கௌரி, 2022:114-123). ‘பரத’ அல்லது ‘பத’ என இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவோர் ஒரே சமூகப் பிரிவினர் தான் என சுதர்சன் செனவிரெட்ண, மெலோனி, புஸ்பரட்ணம் முதலானோர் குறிப்பிடுகின்றனர் (Senaviretne, 1985:52).

**அட்டவணை 3.1: பரதவர் பற்றிய கல்வெட்டுக்களின் தரவுகள்**

| பரத(ர்) | கல்வெட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத | 160 |
| பரத | 23 |
| மொத்தம் | 183 |

மூலம்: **Inscription of Ceylon – Early Brahmi Inscriptions (Vol-1) இலிருந்து பெறப்பட்டவை**




**உரு 3.1: பரதவர் பற்றிய விபரம்**

இலங்கையில் ஏறத்தாழ 160 கல்வெட்டுக்களில் ‘பத’ எனும் பெயரும், 23 கல்வெட்டுக்களில் ‘பரத’ எனும் பெயரும் அடைமொழியாக வருகின்றன. மொத்தமாக பார்க்கின்றபோது 183 கல்வெட்டுக்களில் இப்பெயர் உள்ளது. இவர்கள் பற்றிய குறிப்புகள் உள்ள கல்வெட்டுக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நோக்குமிடத்து பிராமிக் கல்வெட்டுக்கள் எழுதப்படும் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த பல்லின சமூகத்தின் குடித்தொகையில் அவர்களே முதன்மையானவர்கள் எனலாம்.

### 3.2. நாகர்

விஜயன் வருவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள் இயக்கர், நாகர் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வரலாற்றறிஞர்கள் இவர்களை அமானுஸ்யர்கள் என்று கூறியபோதிலும், அண்மைக்கால தொல்லியல், மானிடவியல், சமூகவியல், வரலாற்று, மொழியியல் ஆய்வுகள் விஜயன் காலத்திற்கு (பாளி இலக்கியம் கூறுகின்றமை) முன்னரே பல்லினப் பண்பாடு கொண்ட நாகரிக சமூகங்கள் இலங்கையில் தோன்றி வளர்ந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.

மகாவம்சம், பிராமிக் கல்வெட்டுக்கள் என்பனவற்றில் குறிப்பிடப்படுகின்ற நாகர் ஓர் தனித்துவமான இனக்குழுவாக வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. கருணாரெட்ண இது இனக்குழுவுக்குரிய பெயர் என்பதற்கு பிராமிச் சாசனங்களுடன் மகாவம்சத்தில் வரும் குறிப்புகளையும் தொடர்புபடுத்திக் காட்டுகிறார் (Karunaratne, 1984:56). தொல்லியலாளரான தெரணியகல இவர்களை நுண்கற்காலப் பண்பாட்டுக்குரிய ஆதி ஒஸ்ரலோயிட் மக்களாக அல்லது பெருங்கற்பண்பாட்டை தோற்றுவித்த திராவிட இனக்குழுவாக இருக்கலாம் எனக் கருதுகின்றார் (1992:735).

நாக இனக்குழுவை அமானுஸ்யர்கள் எனக் கருதிய பரணவிதானவும் பொம்பரிப்பில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் தனது முன்னைய கருத்தை மாற்றி இவர்களைத் திராவிட இனமாகக் குறிப்பிடுகின்றார். இந்திரபாலா நாகர் இலங்கையில் ஆதி இரும்புக் காலப் பண்பாடு பரவிய காலத்தில் நாட்டின் பல்வேறு வட்டாரங்களில் வாழ்ந்த இனக்குழு என்றும், தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்த இவ்வினம் காலப்போக்கில் அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் உருவாகிக் கொண்டிருந்த

பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவுடன் கலந்து கொண்டனர் எனவும் குறிப்பிடுகின்றார் (இந்திரபாலா, 2006:172-173).

**அட்டவணை 3.2 நாகர் பற்றிய கல்வெட்டுக்களின் தரவுகள்**


| **நாகர்** | **கல்வெட்டுக்களின் எண்ணிக்கை** |
|---|---|
| மஹாராஜ பட்டம் பெற்றவர்கள் | 25 |
| தனிப் பெயர்கள் | 21 |
| பருமக பட்டம் பெற்றவர்கள் | 18 |
| ராஜ பட்டம் பெற்றவர்கள் | 17 |
| இடப்பெயர்கள் (நாக பவத, நக கமிய) | 10 |
| பத (பரத) | 9 |
| தேரர் | 8 |
| கமிக பட்டம் பெற்றவர்கள் | 6 |
| உபராஜ பட்டம் பெற்றவர்கள் | 5 |
| தொழில்கள் செய்வோர் | 5 |
| உபாஸக | 4 |
| உபாஸிக | 4 |
| அமைச்சர் (அமதி) | 2 |
| நாக குலம் | 2 |
| கபதி | 1 |
| பெண் தேரி | 1 |
| **மொத்தம்** | **138** |

**மூலம்: Inscription of Ceylon – Early & Late Brahmi Inscriptions (Vol 1, Vol II -Part I & II) இலிருந்து பெறப்பட்டவை.**

கி. பி. முதலாம் நூற்றாண்டுக்கு முந்திய கால கல்வெட்டுக்களில் 77 இடங்களில் நாக என்னும் பெயர் காணப்படுகின்றது. பிந்தைய பிராமிக் கல்வெட்டுக்களில் 61 இலும் சேர்த்து மொத்தமாக 138 கல்வெட்டுக்களில் இப்பெயர் காணப்படுகின்றது. இவற்றில் நான்கு தவிர ஏனைய அனைத்திலும் குலத்தின் அல்லது இனத்தின் பெயர்களாகவன்றி தனிநபர்களின் பெயர்களாக வருகின்றன. பெருங்கற் காலத்தில் வாழ்ந்த நாகர் இன மக்களின் அடையாளங்கள் மறைந்து போகின்ற ஒரு காலகட்டத்திலேயே இப்பிராமிக் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தமது இனக்குழுவின் அடையாளம் மருவிச் செல்கின்ற சூழலில் தமது முன்னோரது இனத்தின் பெயரை மறவாது தமது பெயர்களில் பயன்படுத்தினர் எனக் கருதலாம். ஆயினும் இரு கல்வெட்டுக்களில் 'நாக குலம்' பற்றிய குறிப்பு காணப்படுகின்றமையானது இவர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

சாசனங்கள் குறிப்பிடும் நாகரிற் 18 பேர் பருமக எனும் பட்டத்தைப் பெற்றவர்கள். பருமக என்பது பல்வேறு சமூகங்களிடையேயும் காணப்பட்ட பட்டப்பெயராகும். அந்தவகையில் நாகர் குலத்துடனும் இப்பெயர் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அனுராதபுரத்தில் ஆறு

கல்வெட்டுக்களில் நாகர், பருமக பட்டத்துடன் குறிப்பிடப்படுகின்றனர் (I.C.1970.Nos. 54, 120, 196, 261, 263, 265). பொலநறுவையிலுள்ள இரு கல்வெட்டுக்களிலும் (I.C.1970.Nos.312, 318), குருநாகல் மாவட்டத்தில் ஏழு கல்வெட்டுக்களிலும் இந்த அம்சத்தைக் காணலாம். அம்பாந்தோட்டையிலுள்ள மூன்று கல்வெட்டுக்களில் ஒன்றில் பருமக நாக$_3$வின் மகன் நாக$_3$ எனக் கூறப்பட்டுள்ளது (I.C.1970.No.677). நாகர்கள் சமூகத்தில் தலைமையாளராகவும், நாட்டின் நிர்வாகத்திலும் முக்கியமானவர்களாகவும் காணப்பட்ட பருமக எனும் பதவியையும் வகித்திருந்தனர் என்பது அவர்கள் சமூகத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.




**உரு 3.2: நாகர் பற்றிய விபரம்**

ஆறு பேர் கமிக என்னும் பட்டத்தைக் கொண்டிருந்தனர். கமிக என்பது கிராமத்தின் தலைவர் எனும் பதவிப் பெயராகும். இப்பெயர் நாகருடன் இணைந்தவகையில் அநுராதபுரம், இரத்தினபுரி, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவற்றில் தந்தை

நாக என அழைக்கப்பட்டபோதிலும் மகன் அத்தகைய பின்னொட்டின்றி குறிப்பிடப்பட்டுள்ளான். நாகர் இதுவரை பேணிவந்த சமய மரபுகளுக்கு மாறாக புதிய பௌத்த மரபைப் பின்பற்றத் தொடங்கியமையால், படிப்படியாக ‘நாக’ எனும் தமது குலப்பெயரை குறிப்பிடாமை, தந்தை அப்பெயருடனும் மகன் அவ்வாறின்றியும் வருகின்றமை காட்டுகின்றது.

ராஜ எனும் சொல் பதினேழு கல்வெட்டுக்களில் நாகருடன் தொடர்புபடுகின்றன. அதில் வவுனியா பெரியபுளியங்குளத்தில் அமைந்த 04 கல்வெட்டுக்கள் ‘ராஜ நாக’ எனும் ஒரே அரசனால் வழங்கப்பட்டவை (I.C.1970.Nos.338, 339, 340, 341). இதே பெயரை ஒத்த அரசனது கல்வெட்டுக்கள் இரண்டு கண்டியில் கிடைத்துள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ‘உபராஜ நாக’ பற்றிய இரு கல்வெட்டுக்கள் உள்ளன (I.C.1970.No.389, 487). பிந்தைய பிராமிக் கல்வெட்டுக்கள் 25 இல் மகாராஜ எனும் பட்டத்துடன் நாக எனும் பெயர் இடம்பெறுகின்றது. அமைச்சர்களின் (அமதி) பெயர்களாக இரு இடங்களில் நாக வருகின்றது.

நாகர் மஹாராஜ, ராஜ, வேள் என்னும் உயர்பதவிகளைப் பெற்றிருந்தபோதிலும் அவர்களிற் பலர் பயிர்ச்செய்கையாளர், பொற்கொல்லன் (தலதர- I.C.1970.No.80), மணிவினைஞர் (மணிகர- I.C.1970.No.1033), இரும்புக் கொல்லன் (கபர - I.C.1970.No.1198) முதலான பல்வேறு தொழில்களையும் மேற்கொண்டுள்ளனர். நாகவின் மகனொருவன் யானைக்கு பயிற்சி வழங்குபவனாக இருந்தமை பற்றிய செய்தியும் கல்வெட்டொன்றில் காணப்படுகின்றது (I.C.1970.No.112).

இலங்கையிலுள்ள ஒன்பது கல்வெட்டுக்களில் நாகருடன் பத எனும் பட்டம் இணைந்து வருகின்றது. ஒன்றில் பரத எனும் பெயருடன் வருகின்றது. இரு வேறு சமூகங்களின் பெயர்களை இணைத்து இப்பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. இது நாக(ர்), பரத(ர்) ஆகிய இருவேறு சமூகப் பிரிவுகளின் இனக்கலப்பிற்கான உதாரணமாகக் கொள்ளலாம் (பத்மநாதன், 2016:24). புராதன காலத்தில் இத்தகைய பல இனக்கலப்புக்களினூடாகவே பிற்கால சமூகங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நாக குலம்:** ‘நாக குலம்’ பற்றிய குறிப்பு இலங்கையில் இரண்டு இடங்களில் கிடைக்கின்றது. இவற்றுள் குருநாகல் மாவட்ட ஹிப்பவுவ (I.C.1970.No.958) என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டில் பருமக பட்டத்தை சூடிய நாககுலத்தினைச் சேர்ந்த வருமான அதிகாரி ஒருவனைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அம்பாறை பம்பரகஸ்தலாவ கல்வெட்டில் நாக குலம் பற்றிய முக்கிய செய்தி காணப்படுகிறது. இதில் அரண்மனைச் சமையலறையின் பொறுப்பாளராகக் காணப்பட்ட பருமக பட்டத்தைப் பெற்ற பெண் பற்றிய செய்தி காணப்படுகின்றது.

**இடப்பெயர்கள்:** நாக பவத: ‘ப$_3$த$_3$த மிதேன மபித நாக$_3$பவத ஸெனேஸன’ (I.C.1970.No.522) என பம்பரகஸ்தலாவக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. நாகபவத (நாக பப்பத) என்பது நாக பர்வத (நாக மலை) எனும் சொல்லிலிருந்து மருவியிருக்கலாம் என சிற்றம்பலம் கருதுகின்றார் (1996:123). நீண்டகாலமாக நாக வழிபாடு மேற்கொண்ட இடமாகையால் இப்பெயர்

ஏற்பட்டிருக்கலாம். குருநாகல் மாவட்ட கல்லாவ விகாரைக் கல்வெட்டில் (I.C.1970.No.1149) 'நககமிய' எனும் பெயர் உள்ளது. இப்பெயர் நாகங்கள் வாழும் கிராமத்தை குறிக்கலாம். பிந்தைய எட்டுக் கல்வெட்டுக்களில் நாக பவதஹி, நாக மஹாவிஹாரகி, நாக பவத்த என விகாரைகளின் பெயராகவும், நாக தீப என பிராந்தியத்தின் பெயராகவும், நாக வபி என குளத்தின் பெயராகவும் இடம்பெறுகின்றது.

புராதன காலத்தில் நாகர் ஒரு இனக்குழுவாக வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் பிற்காலத்தில் ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும் வேற்றின மக்களோடு கலப்புற்றனர். இம்மக்கள் புராதன காலத்தில் இலங்கையில் செல்வாக்குடைய பிரிவினராக விளங்கியிருந்தனர் எனத் துணியலாம். இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் மூலம் ஆரம்பத்தில் நாக வழிபாட்டைப் பின்பற்றிய மக்கள் பிற்காலத்தில் பௌத்த, இந்து சமயங்களுக்கு மாறினர் என்கின்ற முடிவிற்கு வரமுடிகின்றது. ஏறத்தாழ 17 கல்வெட்டுக்களில் பௌத்த தேரர்கள், தேரி, உபாஸகர்களின் பெயர்களாக நாக இடம்பெறுகின்றது.

**3.3) தமேட (தமிழர்)**

ஆதி வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழ் இனக்குழு பற்றி அனுராதபுரம், வவுனியா (பெரியபுளியங்குளம்) (I.C.1970.Nos.356,357), திருகோணமலை (சேருவில) (Malini Dias, 1991:68), அம்பாறை (குடுவில்) (I.C.1970.No.480) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களினூடாக அறிய முடிகின்றது. இவற்றில் 'தமெட, தமேல' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளன. ஐந்து கல்வெட்டுக்களில் அனுராதபுரத்திலுள்ள கல்வெட்டைத் (I.C.1970.No.94) தவிர ஏனைய நான்கும் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடகிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

அனுராதபுரத்திலுள்ள கல்வெட்டில் வருகின்ற பெயர்கள் ஏனைய கல்வெட்டுக்கள் போன்று பிராகிருதச் சொற்களாகக் காணப்படுகின்ற போதிலும், பெயருக்கு முன்னால் 'தமிட' எனும் தமிழ் இனக்குழுவின் பெயர் காணப்படுகின்றது (Karunaretne, 1984). ஆதி வரலாற்றுக் காலத்தில் தமிழ் வணிகர்கள், அநுராதபுரத்து அரசியல், வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமைக்கும், வணிக கணங்களை அமைத்துச் செயற்பட்டமைக்கும் இக்கல்வெட்டுக்கள் சான்றுகளாகும். தமிழ் வணிகர்கள் பிராகிருதப் பெயர்களுடன் இக்கல்வெட்டில் காணப்படுகின்றனர். பெரும்பாலும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவோர் பிராகிருதப் பெயர்களுடன் வருவதை வைத்துக் கொண்டு அவர்கள் அனைவரும் பிராகிருதம் பேசிய ஓர் இனக்குழுவினர் என்கின்ற முடிவிற்கு வரமுடியாது (இந்திரபாலா, 2006:172). பெரியபுளியங்குளக் கல்வெட்டில் விஷாஹ எனும் தமிழ் வணிகர் பற்றி இரு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன (I.C.1970.Nos.356, 357).

இலங்கையில் தமிழரின் இருப்பு பற்றிக் கூறும் இந்திரபாலா அவர்கள் "பிராமிக் கல்வெட்டுக்கள் எழுதப்பட்ட காலத்திற்கு முன்னரே தமிழர் இலங்கையில் இருந்திருக்ககூடும். பொ.ஆ.மு மூன்றாம்

நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் பேசுவோர் பரவலாக தமிழ் நாட்டிலும் அயல் இடங்களிலும் இருந்தனர். எனவே இலங்கைக்கும் அதேகாலமளவில் அவர்கள் வந்திருக்கலாம் என்று கூறலாம். தமிழ் பேசுவோர் மட்டுமின்றி திராவிட மொழிகளைப் பேசுவோரும் அங்கு இருந்திருக்கலாம்'' (இந்திரபாலா, 2006:174-175).

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே அம்மக்கள் அங்கு வாழ்ந்தனர் என்பதும் தெளிவாகின்றது. இவர்கள் பெருங்கற்பண்பாட்டின் தொடர்ச்சியாக உருவாக்கம் பெற்ற தனித்துவமான பண்பாட்டைக் கொண்ட 'தமிழர்' எனும் இனக்குழு என்பது குறிப்பிடத்தக்கது. இம்மக்களில் கணிசமானோர் பௌத்தத்தை பின்பற்றியிருந்தனர் எனக் கருதலாம்.

### 3.4) கபோஜ(ர்)

ஐந்து கல்வெட்டுக்களில் 'காபோஜிய' பற்றிய குறிப்புள்ளது. குருநாகலில் உள்ள கல்வெட்டொன்றும் கோத கபோஜ பருமக கோபாலவின் மனைவியான உபாசிகை சிதா பற்றிக் குறிப்பிடுகின்றது (I.C.1970.No.990). அம்பாறை வோவட்டாகல கல்வெட்டொன்றில் 'கபோஜிய மஹாபூதியாந' என்ற குறிப்பு காணப்படுகிறது (1970.No.553). அம்பாந்தோட்டையில் மூன்று கல்வெட்டுக்களில் குறிப்புள்ளது. இதில் வரும் கபோஜிய என்பதை காம்போஜர் எனக்கொண்டு, இக்கல்வெட்டு வாசகத்தை காம்போஜர் இனக்குழுக்களின் மகாகணம் என பரணவிதான பொருள்கொள்கின்றார் (I.C.1970:xc-xci). அதாவது இந்தியாவின் காம்போஜ தேசத்தைச் சேர்ந்த வணிகர்கள் அங்கிருந்து இலங்கைக்கு வந்து அக்காலத்தில் தங்கியிருந்தனர் என்று கருதலாம். இந்த வணிகர்கள் குழுக்களாக வாழ்ந்தனர். இக்குழுவே மஹாபூதியாந என அழைக்கப்பட்டது. உரோகண ஜனபதவில் உள்ள காம்போஜ காமத்தில் வாழ்ந்த மலேய்ய என்னுந் தேரர் பற்றி கி.பி நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சீஹளவத்து என்னும் நூல் குறிப்பிடுகின்றது. எனவே வர்த்தக நடவடிக்கைகளுக்காக காம்போஜர்கள் காலப்போக்கில் இங்கேயே தங்கி, தமக்கென கிராமங்களை அமைத்து வாழ்ந்தனர் எனக் கருத முடிகின்றது. இவற்றினூடாக இலங்கையின் புராதன காலத்தில் பல்லின இனக்குழுக்களும் பௌத்த சமயத்தை ஆதரித்து பேணியமையை அறிய முடிகின்றது.


### 3.5) பிராமணர்

இந்தியத் தொடர்பால் வேத நெறிக் கலாசாரத்தின் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டதால் பிராமணர் முக்கிய பங்கினை வகிக்கத் தொடங்கினர். இதனைப் பிராமிக் கல்வெட்டுக்களும், பாளி இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. இவர்கள் கல்வி கேள்விகளில் மேன்மை பெற்று விளங்கியதால் சமயத் துறையிலும், பிற அரசியல் துறைகளிலும் பண்டுதொட்டு ஒரு செல்வாக்கான இடத்தினை வகிக்கத் தொடங்கினர்.

22 பிராமிக் கல்வெட்டுக்களில் பௌத்த மதத்திற்கு பிராமணர்களால் அளிக்கப்பட்ட குகைத் தானங்கள் பற்றி நேரடியான குறிப்புகள் காணப்படுகின்றன. இன்னும் 11 கல்வெட்டுக்களில் பிராமணர்களின் கோத்திரங்களின் பெயர்களை பேரா.சிற்றம்பலம் அடையாளம் காண்கின்றார்

(1996:283). எனினும் இத்தானங்களை அளித்த சகல பிராமணரும் பௌத்தர்களாக மதம் மாறியிருத்தல் வேண்டும் என எண்ண முடியாது. சமயப்பொறை நிலவிய அக்காலத்தில் தமது

பழைய அனுஷ்டான முறைகளைப் பின்பற்றிக்கொண்டே இவ்வாறு பௌத்த மதத்திற்குச் சிலர் தானத்தை வழங்கியிருக்கக் கூடும். அத்துடன் இக்குகைத்தானங்கள் பௌத்தத்தை ஆதரித்த பிராமண குலத்தவரை மட்டுமே குறிப்பிடுகின்றன. எனினும், பௌத்த மதத்தினை ஆதரிக்காது, குகைத் தானங்களை அளிக்காது, தமது பாரம்பரிய சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டிருந்த பிராமண குலத்தவர் பலரும் இருந்திருக்கலாம். துரதிஷ்டவசமாக அவர்களைப் பற்றிய




**உரு 3.5: பிராமணர் பற்றிய கல்வெட்டுக்களின் விபரம்**

தடயங்கள் நமக்குக் கிடைக்கவில்லை (சிற்றம்பலம், 1996:269-270). ஆசிரியர்களாகவும், சோதிடர்களாகவும், மருத்துவர்களாகவும் இவர்கள் தேர்ச்சி பெற்றிருந்ததை ஈழத்து இலக்கிய, கல்வெட்டாதாரங்கள் எடுத்தியம்புகின்றன.

பிராமிக் கல்வெட்டுக்கள் பிராமணர்களைப் பற்றியும், இவர்களது கோத்திரங்கள் பற்றிய தகவல்களையும் தருகின்றன. கிழக்கிலே அம்பாறை மாவட்டத்திலுள்ள கோன்கலக் கல்வெட்டில் 'பமண அதிமதக' என்ற குறிப்பு வருகின்றது (I.C.1970.No.545). 'அதிமதக' என்பது ஐத்திரேய கோத்திரத்தினைக் குறிக்கின்றது (அத்ரேய மத்ர்க-skt). சதபத பிராமணத்தில் இப்பெயர் குறிப்பிடப்படுகின்றது. இம்மாவட்டத்திலுள்ள களியோடையில் உள்ள கல்வெட்டில் (1970.No.486) "கொதம நம சமணெ" என்ற வாசகம் காணப்படுகின்றது. இதன் பொருள் கௌத்தம கோத்திரத்தினைச் சேர்ந்த பௌத்த பிக்கு என்பதாகும். கல்வெட்டுக்களினூடாக இவர்கள் தொடர்பான மேலதிக விடயங்களை அறிய முடியாதுள்ளது.


### 4. சமூகப் பிரிவுகள்

**அட்டவணை 4.0 சமூகப் பிரிவுகளின் தரவுகள்**

| சமூகப் பிரிவுகள் | கல்வெட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| பரதவ(ர்) | 183 |
| நாகர் | 138 |

| | |
|---|---|
| பிராமணர் | 33 |
| தமேட (தமிழர்) | 05 |
| கபோஜ(ர்) | 05 |
| **மொத்தம்** | **364** |

மூலம்: **Inscription of Ceylon – Early & Late Brahmi Inscriptions (Vol 1 + Vol II -Part I & II) இலிருந்து பெறப்பட்டவை.**




**உரு 4.0 சமூகப் பிரிவுகளின் எண்ணிக்கை விபரம்**

## முடிவுரை

இவ்வாய்வின் அடிப்படையில் நோக்குகின்றபோது பரத அல்லது பத எனப்படுகின்ற பரதவ குல மக்களே அதிகளவு தானங்களை வழங்கியுள்ளனர். புராதன இலங்கையில் மிகமுக்கியமான சமூக வகுப்பினராக இவர்கள் காணப்பட்டுள்ளமை இதனூடாகத் தெளிவாகின்றது. கடலால் சூழப்பட்ட தீவின் அனைத்துப் பிராந்தியங்களிலும் (அநுராதபுரம், வவுனியா, மொனராகலை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, கண்டி, குருணாகல்) இவர்களது கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளமையானது அம்மக்களது கடல் சார்ந்த தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வியாபித்திருந்தமையைக் காட்டுகின்றது. அதற்கு அடுத்ததாக நாகர்களது பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களே அதிகளவில் காணப்படுகின்றன. இலங்கையின் பூர்வ குடிகளான நாகர்கள் தமது வழிபாடுகளிலிருந்து விடுபட்டு காலப்போக்கில் பௌத்த சமயத்தை ஏற்றுக்கொண்டுள்ளமையை இது வெளிப்படுத்துகின்றது. கி. மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக தமிழ் மக்கள் தனித்ததொரு இனக்குழுவினராக அல்லது சமூகமாக வாழ்ந்தமைக்கு இக்கல்வெட்டுக்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். எண்ணிக்கையில் குறைவான கல்வெட்டுக்கள் இப்பிரிவினர் பற்றிக் காணப்படுகின்றபோதிலும் இவை மிக முக்கியமான சான்றுகளாக அமைகின்றன. பிராமணர்கள் தமது வேதநெறிக் கலாசாரத்தோடு பௌத்தத்தையும் ஆதரித்துள்ளனர் என்பதனை இதனூடாக வெளிப்படுத்தலாம். அதேபோன்று காபோஜ போன்ற வெளிநாட்டு இனத்தவர்களும் புராதன இலங்கையில் பௌத்தத்தை ஆதரித்துள்ளனர் என்கின்ற

முடிவிற்கு வரமுடிகின்றது. புராதன இலங்கையில் பல்வேறு பிரிவினராலும் பௌத்தம் ஆதரிக்கப்பட்டமை பிற்காலத்தில் இந்நெறியின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது எனக் கருதலாம்.

**சுருக்க விளக்கம்**

I.C. - Paranavitana,S, Inscriptions of Ceylon, The Department Of Archaeology Ceylon, Colombo.

**உசாத்துணை**

இந்திரபாலா,கா (2006). இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கௌரி,ல (2022). வரலாற்று நோக்கில் கிழக்கிலங்கை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சிற்றம்பலம்,சி.க (1996). ஈழத்து இந்துசமய வரலாறு, பாகம்:1, கி.பி 500 வரை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

பத்மநாதன்,சி (2016). இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்-I, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

புஷ்பரட்ணம்,ப (2001). பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு), கொழும்பு தமிழ்ச் சங்கம்.

Karunaratne,S (1984). Epigraphia Zeylanica, Vol.VII, (Special volume on the Brahmi Inscriptions of Sri Lanka), Archaeological Survey of Ceylon, Colombo.

Muller,E (1984). Ancient Inscriptions in Ceylon, Asian Educational Services, New Delhi.

Paranavitana,S (1970). Inscriptions of Ceylon: Early Brahmi Inscriptions, Vol-I, The Department Of Archaeology Ceylon, Colombo.

Paranavitana,S (1983). Inscriptions of Ceylon: Late Brahmi Inscriptions, Vol-II, Part-I, The Department Of Archaeology Ceylon, Colombo.

Paranavitana,S. Malini Dias (Ed.) (2001). Inscriptions of Ceylon: Late Brahmi Inscriptions, Vol-II, Part-II, The Department Of Archaeology Ceylon, Colombo.

Parkar,H (1981). Ancient Ceylon, Asian Educational Services, New Delhi.

Seneviratne,S (1985). Social Base of Early Buddhism in south East India and Sri Lanka (C.3rd Century B.C.-3rd Century A.D.), Jawaharlal Nehru university, New Delhi: Ph.D. Thesis, Department of History (Unpublished).